**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.3431/ஆ5/2023, நாள்.14.11.2023**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா முன்னிட்டுஅரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 9ம் வகுப்பு மற்றும் 10ம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவிகளுக்கு கட்டுரை போட்டிகள் நடத்துதல் – தொடர்பாக

பார்வை ஆற்காடு, ஆற்காடுசார் தொல்லியல் அலுவலர் கடித நாள். 12.08.2023

•••••

பார்வையில் காணும் கடிதத்தின்படி தொல்லியல் துறை சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு குடியாத்தம் மற்றும் பேர்ணாம்பட்டு ஒன்றியத்தில் உள்ள அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 9ம் வகுப்பு மற்றும் 10ம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவிகளுக்கு கீழ்காணும் அட்டவணைப் படி கட்டுரை போட்டி நடைபெற உள்ளது.

| |
|---|
| **போட்டி நடைபெறும் இடம் – அரசு (ஆண்கள்) மேல்நிலைப் பள்ளி, நெல்லூர்பேட்டை, குடியாத்தம்** |
| **நாள் – ~~24.11.2023~~ 28/11/23. (~~வெள்ளிக்கிழமை~~) நேரம் – காலை 9.00 மணி** |
| **கட்டுரை போட்டியின் தலைப்பு – "பண்டைத் தமிழ்ச் சமூகம்"** |

மேற்காணும் போட்டிக்கு குடியாத்தம் மற்றும் பேர்ணாம்பட்டு ஒன்றியத்தில் உள்ள அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 9ம் வகுப்பு மற்றும் 10ம் வகுப்பு பயிலும் மாணவர்களில் பள்ளிக்கு ஒருவர் வீதம் என தவறாமல் கலந்துக்கொள்ள வேண்டும். போட்டியில் பங்கேற்கும் மாணவ / மாணவிகளை பாதுகாப்பாக பொறுப்பாசிரியருடன் அனுப்பி வைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குடியாத்தம் மற்றும் பேர்ணாம்பட்டு ஒன்றியத்திற்குட்பட்ட அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது..

<u>குறிப்பு –</u>

1. கட்டுரை 8 பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். காலம் இரண்டு மணி நேரம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
2. கட்டுரை போட்டியில் கலந்துக்கொள்ளும் மாணவர்களுக்கு கட்டுரை எழுதுவதற்கான தாள், பேனா மற்றும் பங்கேற்பாளர் சான்றிதழ்கள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

3/4 14.11.2023

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
குடியாத்தம் மற்றும் பேர்ணாம்பட்டு ஒன்றியங்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. ஆற்காடு சார் தொல்லியல் அலுவலர், ஆற்காடு – 632 503.
2. தலைமையாசிரியர்,
அரசு (ஆண்கள்) மேல்நிலைப் பள்ளி, நெல்லூர்பேட்டை, குடியாத்தம்.
(போட்டிகள் நடைபெறுவதற்கு போதிய வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். )